**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.187/2024 - PW- 7**

| | |
|---|---|
| Name | திரு. ராஜேஷ் காந்தி |
| Husband/Father Name | மகா லிங்கம் |
| Village /Area | விருஞ்சிபுரம் |
| Taluk | வேலூர் |
| Occupation | அரசு மருத்துவர் |
| Age | 40 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரையில் தனியார் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019-ம் ஆண்டு வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் அரசு தலைமை மருத்துவராக பணியில் இருந்த போது 20.05.2019-ம் தேதி சுமார் மாலை 03.00 மணியளவில் நான் பணியில் இருந்த போது 23 வயது மதிக்கதக்க மதியழகன், த/பெ.மோகன் என்பவர் அடையாளம் தெரிந்த நபர்களால் கைகளால் மற்றும் கட்டையால் தாக்கப்பட்டு சிகிச்சைக்காக வந்தார்.

அவரை விபத்து பதிவேட்டில் பதிவு செய்து பதிவேடு எண். 2441 என பதிவு செய்து அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தேன். அந்த விபத்து பதிவேடு **அதசாஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு முதலுதவி செய்து மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினேன். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்த சான்றிதழை வைத்து அவருக்கு தலையில் எலும்பு உடைந்திருந்ததாகவும், மூளையில் இரத்த கசிவு

ஏற்பட்டதற்கான சிகிச்சை அளித்திருப்பதாகவும், கல்லீரலில் கன்னிய காயம் இருந்ததாகவும் ஆகிய அனைத்தையும் வைத்து அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். அந்த காயச்சான்று **அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

காயம் பட்ட நபரின் அங்க அடையாளம் பற்றி விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சிகிச்சை அளித்த மதியழகன் இன்று நீதிமன்றத்தில் வந்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காயம் பட்ட நபரை அவரது சகோதரர் சிலம்பரன் தான் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

மேற்படி காயம் மதியழகனுக்கு எவ்வாறு ஏற்பட்டது என்று மதியழகனும் அவரது சகோதரனும் கூறினார்கள். விபத்து பதிவேட்டில் யார் காயத்தை பற்றி என்னிடம் கூறினார்கள் என்பது பற்றி எழுதவில்லை என்று சொன்னால் சரிதான். காயம் பட்ட நபரை 10 தெரிந்த நபர்கள் தாக்கினார்கள் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

விபத்து பதிவேட்டில் நான் வெளிப்புற காயங்களின் தன்மையையும், நிறத்தை பற்றியும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் மேல் சிகிச்சைக்காக காயம் பட்ட நபரை வேலூர் அரசு மருத்துவனைக்கு தான் அனுப்பி வைத்தேன் என்று சொன்னால் சரிதான். காயச்சான்றிதழில் காயம் பட்ட நபருக்கு வேலூர் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சை கொடுத்தது சம்பந்தமான ஆவணங்களை நான் பார்த்ததாக அதில் எழுதியுள்ளேனா என்றால் எழுதியுள்ளேன் ஆனால் அவைகளை இணைக்கவில்லை. மேற்படி

ஆவணங்களின் சாரம் பற்றியாவது அதில் எழுதியுள்ளேனா என்றால் எழுதியுள்ளேன்.

எந்த தேதியில் இருந்த எந்த தேதி வரை காயம் பட்ட நபர் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்ற விவரம் பற்றி அதில் எழுதியிருந்தேனா என்றால் இல்லை. காயம் பட்ட நபரை நான் புறநோயாளியாக தான் முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். நான் காயம் பட்ட மதியை பார்க்கவில்லை என்றும், வேலூர் அரசு மருத்துவமனையில் என்ன பரிசோதனைகள் மதிக்கு கொடுக்கபட்டது என்று நான் பார்க்காமலும், நான் கொடுங்காயம் என்று தவறாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி காயங்கள் மதி என்பவருக்கு ஏற்படவே இல்லை என்று சொன்னால் தவறு. வழக்கு குறித்து போலீசார் என்று விசாரித்தார்கள் என்று தேதி ஞாபகம் இல்லை. என்னை போலீசார் விபத்து பதிவேடு பதிவு செய்த தேதியன்றும் காயச்சான்று வழங்கிய தேதி அன்றும் விசாரித்தார்கள். போலீசார் என்னிடம் எந்த ஆவணங்களையும் காண்பிக்கவில்லை என்றும் நான் அவர்களுக்கு பவ்வியப்பட்டு சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.13 18:29:02 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.